**இலங்கை புகையிரத சேவை**

**இலங்கை புகையிரத திணைக்களத்துக்குரிய புகையிரத நிலையங்களுக்கு அண்மையில் அமைந்துள்ள வாகன தரிப்பிடங்களை குத்தகைக்கு வழங்குவதற்காக பெறுகைக் குழுகேள்வி கோரப்படுகின்றது**.

இலங்கை புகையிரத திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக்குழுவின் தலைவரால் கீழ் காணும் வாகன தரிப்பிடங்களை ஒரு வருடகாலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதன் பொருட்டு கேள்விதாரர்களிடம் இருந்து முத்திரை இடப்பட்ட பெறுகைக்கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன .

| தொடரிலக்கம் | வண்டி தரிப்பிடம் | அளவு(பர்ச்சஸ்) | தொடரிலக்கம் | வண்டி தரிப்பிடம் | அளவு(பர்ச்சஸ்) |
|---|---|---|---|---|---|
| 01 | பெஸ்டியன் மாவத்தை | ரூட் 1 பர்.5.95 | 14 | நீர்கொழும்பு | 40 |
| 02 | கெப்டன் பூங்கா,கோவில் பாதை | 14 | 15 | கந்தானை | 6 |
| 03 | டீ.பி.ஜயா மாவத்தை | 102.45 | 16 | மாத்தறை | 1.47 |
| 04 | மருதனை புகையிரத நிலையத்திற்கு முன்னால் | ரூட்1 பர்.0.40 | 17 | வெலிகமை | 1.32 |
| 05 | போக்குவரத்து அமைச்சின் முன்னால் | ரூட்1 பர். 37.15 | 18 | களுத்துறைதெற்கு | 2.29 |
| 06 | அம்பலங்கொடை 11 | 24.3 | 19 | களுத்துறை வடக'கு | 25.34 |
| 07 | ஹிக்கடுவை | 20.42 | 20 | பெலிஅத்த | 13.22 |
| 08 | வேயங்கொடை | 28.57 | 21 | கெக்கணதுர | 1.32 |
| 09 | முத்தெட்டுகலை | 40.40 | 22 | கம்புருகமுவ | 0.88 |
| 10 | கொழும்புகெதர | ரூட்1 பர்.16.90 | 23 | அஹங்கமை | 27.55 |
| 11 | குருணாகலை | 31.41 | 24 | பூஸ்ஸ | 47.75 |
| 12 | மீரிகம | 26.5 | 25 | மட்டக்களப்பு | 10.50 |
| 13 | மாதம்பே | 20 | | | |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள வாகன தரிப்பிடங்கள் பற்றிய விபரங்கள் பெறுகை ஆவணங்களில் 01 வது உப அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

01. தகைமைகள்

திணைக்கள நிபந்தனைகளுக்கு கீழ் அதி உச்ச விலையை சமர்ப்பிக்கும்கோருனருக்கு, ஏற்புடைய வாகன தரிப்பிடங்களுக்கென தனித்தனியே குத்தகைக்கு வழங்கப்பட நடவடிக்கைகள்மேற்கொள்ளப்படும்,

02.கேள்வி விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளல்.

பெறுகை ஆவணங்களை 2023 நொவெம்பர் மாதம் 20 ஆம் திகதி பி.ப2.00 மணி வரை புகையிரத வர்த்தக மற்றும் சந்தைபடுத்தல் அலுவலகத்திலோ அல்லது வாகன தரிப்பிடம் அமைந்துள்ள புகையிரத நிலையத்திலோ பெற்றுகொள்ளலாம். அதற்காக கொழுப்பு-10, இலங்கை புகையிரத சேவையின் பிரதான நிதி உத்தியோகத்தரிடமோ அல்லது குறித்த வாகன தரிப்பிடம் அமைந்துள்ள புகையிரத நிலையாதிபதியிடமோ மீளளிக்கப்படாத கேள்வி படிவக்கட்டணமாக ரூ.2,500/- பணத் தொகையைச் செலுத்தி, பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை புகையிரத தலைமையகத்தின் பிரதி அத்தியட்சகர் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தலிடமோ அல்லது குறித்த புகையிரத நிலையத்திற்கோ சமர்ப்பித்தல் வேண்டும். கேள்வி மனுக்கோரலின் உப அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்ஒவ்வொரு வாகன தரிப்பிடத்திற்காகவும் தனி தனியாக கேள்வி மனுக்கள் சமர்ப்பிக்க வேண்டியதுடன் கேள்வி படிவக்கட்டணத்திற்கு மேலதிகமாக அவ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீண்டும் செலுத்தப்படும் கேள்வி பிணையொன்றும் செலுத்தப்பட வேண்டும். ஒரு விலை மனு கோரல் படிவத்தின் மூலம் ஒரு வாகன தரிப்பிடத்திற்கு மாத்திரமே விலை மனு கோரலினை சமர்ப்பிக்கலாம்.

03.கேள்வி விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்.

மேற்படி 02ம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு ஒவ்வொரு வாகன தரிப்பிடம் சார்பாகவும் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதிகளை முறையாக பூர்த்தி செய்து இரு உறைகளில் இட்டு முத்திரையிட வேண்டும். அவ்வுறைகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி எனதெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அவ்வுறைகள் இரண்டையும்ஒரு உறையில் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில், "**புகையிரத நிலையங்களுக்கு அண்மையில் அமைந்துள்ள வாகன தரிப்பிடங்களுக்கான விலை மனுகோரல்**" என்று குறிப்பிட்டு அவ்வுறையை முத்திரையிட்டு 2023 நொவெம்பர் மாதம் 21 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னராக கிடைக்கக்கூடிய வகையில் தலைவர் , திணைக்களபெறுகைக்குழு , விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகம் , புகையிரத தலைமையகம்,ஒல்கொட் மாவத்தை , கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவு தபாலிலோ அல்லது புகையிரத தலைமையகத்தின் பிரதி அத்தியட்சகர் (விற்பனை மற்றும் சந்தைப்படுத்தலின் உத்தியோகபூர்வ அறையில் கேள்விப்பத்திரங்கள் உள்ளிடுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள விசேட கேள்விப்பெட்டியிலோ உள்ளிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் அதன் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலினால் தாமதமானவை அல்லது தொலைந்த விண்ணப்பங்கள் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

04. கேள்வி ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல்.

2023 நொவெம்பர் மாதம் 21 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு மேற்படி மூன்றாம் பந்தியில் தரப்பட்டுள்ள விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்தில் விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விண்ணப்பதாரிக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதிக்கு சமூகமளிப்பதற்கான அனுமதி வழங்கப்படும்.

05 கேள்விகளை கோருவதற்கு முன்னர் மேற்படி சகலவாகன தரிப்பிடங்களையும் பரீட்சிப்பதற்காக விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுவதுடன் அதற்காக குறித்த புகையிரத நிலையத்தில் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

06. திணைக்கள பெறுகைக்குழுவின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.

07கேள்விதாரர்கள் தேவையான மேலதிக விவரங்களை இலங்கை புகையிரத சேவையின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தொ.பே .இல - 011 2421281 (நீடிப்பு - 8235,)

தலைவர்,
திணைக்கள பெறுகைக்குழு ,
புகையிரத தலைமையகம்,
ஒல்கொட் மாவத்தை ,
கொழும்பு 10